பொதுக் கல்வி நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் (GEMP)

(2020- 2024)

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் வலுவூட்டல் மானியம்

School Base Learning Enhancement Grant (SBLEG)

# வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் குறிப்பேடு

ஊவா மாகாணக் கல்வித் திணைக்களம்

பதுளை

## 1.0 அறிமுகம்

2018 – 2024 காலப்பகுதியினுள் உலக வங்கியின் அனுசரனையில் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் இலங்கையின் கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பொதுக் கல்வியின் பண்புத் தரத்தை அபிவிருத்தி செய்வதையும் கல்வியின் பொறுப்புகளை வலுவூட்டவும் நோக்காகக் கொண்டு மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய கல்விச் செயற்பாடுகளுக்காக நிரல் அமைச்சும் ஏனைய மாகாணக் கல்விச் செயற்பாடுகளுக்காக மாகாணக் கல்வி அமைச்சும் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கான நிதி மற்றும் கோட்பாட்டு ரீதியான ஆதரவை வழங்குதல் இவ்வேலைத்திட்டத்தின் பொறுப்புகளாகும்.

இவ்வேலைத்திட்டத்தினூடாக பிரதானமாக பின்வரும் துறைகளின் பெறுபேறுகளை பாடசாலைத் தொகுதியினுள் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ ஆங்கில மொழிப் பாடத்தின் கற்றற் பேறுகள்
- ✓ கணித பாடத்தின் கற்றற் பேறுகள்
- ✓ பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம்
- ✓ பாடசாலை மேம்பாட்டு வலுவூட்டல் வேலைத்திட்டம்.

அத்துடன் பிரதானமாக சுட்டிகள் (DLI) ஊடாக பெறுபேற்று இலக்கை அடைவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

வேலைத்திட்டத்தினுள் மேற்குறிப்பிட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கான உதவி வழங்கப்படுவதுடன், பாடசாலைத் தொகுதியினுள் மேற்படி கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை செயற்படுத்துவிப்பதற்காக நேரடியாக நிதியை பாடசாலைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்நிதி இறுதிக் கொடுப்பனவாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் வலுவூட்டல் மானியம் எனும் பெயரில் (SBLEG) பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியில் வைப்பிலிடப்படும். மேற்படி நிதி மானியத்தை விளைதிறனுள்ள வகையில் செயற்றிறன் மிக்கதாகவும் ஒழுங்கான வழிமுறைகளைப் பின்பற்றியும் பயன்படுத்துவது எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனையும் வழங்குவதற்காக இந்த வழிகாட்டற் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.0 நோக்கங்கள்

பொதுவாக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வழங்கப்படும் மானியங்கள் பாடசாலைகளின் வருடாந்த அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் மதிப்பீடுகளுக்கு அமைய பேணப்படும் கட்டமைப்பு வழிமுறைகளினூடாகப் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் வலுவூட்டல் மானியம் பின்வரும் நோக்கங்களை அடைவதை இலக்காகக் கொண்டு பயன்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. ஆங்கில மொழி கற்றல் விளைவுகளை அபிவிருத்தி செய்தல்
2. கணித பாட கற்றற் பேறை அபிவிருத்தி செய்தல்
3. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைதல்.

4. பாடசாலை மேட்பாட்டு வலுவூட்டல் வேலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு மாணவர்களின் உளவியற் சமூக ஆற்றல்களை விருத்தி செய்தல்.

**நிதி மூலம்**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் வலுவூட்டல் மானியம் (SBLEG) பொதுக் கல்வி நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நேரடி மானியமாக (outright grant) வழங்கப்படும்.

**4.0 நிதிப் பயன்பாட்டுத் துறைகள்**

மேலே 2.0 இல் காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பிள்வரும் துறைகளுக்காக இந்நிதியைப் பயன்படுத்தலாம்.

**4.1 ஆலோசனைச் சேவை மற்றும் உயர் கல்விச் செயற்பாடுகள்.**

- மாணவர்களுக்காக நடாத்தப்படும் கருத்தரங்குகள் / முன்னோடி /செயலமர்வுகள்
- மாணவர் ஆக்க நிர்மாணச் செயற்பாடுகள்
- குறித்த நோக்கை அடிப்படையாகக் கொண்ட மாணவர் முகாம்கள், களப் பயணங்கள், செயற்பாடுகள்.
- பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்/ செயலமர்வுகள் மற்றும் ஆசிரியர் நிரமாணங்கள்
- ஆரோக்கியமான கற்றல் கற்பித்தற் சூழலை ஏற்படுத்தல்
- உளச் சமூக ஆற்றல்களை மேம்படுத்தும் வகையிலான மாணவர் / ஆசிரியர் / பெற்றார் வேலைத்திட்டங்கள்.

**4.2 பாடசாலை முகாமைத்துவ அபிவிருத்திச் செயற்பாடுகள்.**

- பாடசாலை மேம்பாட்டு வலுவூட்டல் வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய பாடசாலை மட்ட வேலைத்திட்டங்கள்.

**5.0 செயற்படுத்தும் முறைகள்.**

5.1 இலக்கம் 2.0 இல் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் வருடாந்த அமுலாக்கற் திட்டமிலுக்கும் மற்றும் மதிப்பிடலுக்கும் இந்நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

5.2 பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் வலுவூட்டல் மானியத்தின் நோக்கத்துடன் தொடர்புபட்ட மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி

தனியான வேலைத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அது வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்ப்பட்டிருத்தல் வேண்டும். (படிவம் 01)

1. குறிப்பு : 2021ம் ஆண்டில் இதனுடன் தொடர்புடைய போதியளவு மற்றும் பொருந்தக்கூடிய செயற்பாடுகள் வருடாந்த அமுலாக்கத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருப்பின் திருத்தப்பட்ட திட்டமிடலாக அத்தகைய செயற்பாட்டுத் திட்டமிடலையும் உள்ளடக்கி அனுமதி பெறப்படல் வேண்டும்.

**7.0 நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமை**

மேலே 2.0 இற் குறிப்பிடப்பட்ட நான்கு நோக்கங்களையும் செயற்படத்தவும் வள்வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவு பாடசாலைத் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படலாம்.

**7.0 நிதிப் பொறுப்பேற்றல்**

மேற்படி நிதி பாடசாலை அபிவிருத்திக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட உடனேயே அது தொடர்பாக அதிபருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உடனேயே அதற்குரிய பாடசாலை அபிவிருத்தி கணக்கின் பற்றுச்சீட்டுடன் முகப்புக் கடிதம்(Covering letter) ஊடாக நிதி பெற்றுக்கொண்டமையை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். (26/2018 சுற்றுநிரூபத்தைப் பயன்படுத்துக) (படிவம் 02).

**8.0 நிதி செலவு செய்தல்**

இந்த நிதியைச் செலவு செய்தல் தொடர்பான விபரங்கள் அடங்கிய தனியான செலவுப் பதிவேடு பேணப்படல் வேண்டும். குறித்த கணக்கு அறிக்கைகள் தனியாகப் பேணப்படல் வேண்டும்.

**9.0 மானியம் தொடர்பாக வலய / மாகாண மட்டத்தில் கண்காணித்தலும் அறிக்கைப்படுத்தலும்.**

இந்த மானியம் தொடர்பில் ஒரு வருடத்துக்குரிய நிதி செலவிடப்பட்டதன் பின்னர் அதிபரினால் தரப்பட்டுள்ள படிவத்துக்கு (படிவம் 3) அமைய தயாரிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கை 3 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு வலயக் கல்விக் காரியாலயத்தின் திட்டமிடல் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதில் ஒரு பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பாடசாலையின் குறித்த வேலைத்திட்டக் கோவையில் உள்ளடக்கப்பட்டு வைத்திருக்கப்படல் வேண்டும்.